போரின் நடுவில் அஸ்ஸீ



போரின் நடுவில் அஸ்ஸீ



ஒரு நாட்டின் போரின் நடுவிலேயே தொடங்குகிறது
இக்கதை.



இது அஸ்ஸியின் கதை.



போர் ஒவ்வொரு நாளும் அஸ்ஸியின் குடும்பத்தை நெருங்கி கொண்டிருந்தததது இருந்தாலும்
அவர்களுடைய அன்றாட வாழ்க்கை இயல்பாகவே இருந்தது .




அஸ்ஸியின் அப்பா மருத்துவராக
பணி செய்து கொண்டிருந்தார்.



அஸ்ஸியின் அம்மா அழகான
ஆடைகளை தைத்தாள்.



அவளின் பாட்டி அழகிய
கம்பளங்களை நெய்தார்.



ஒவ்வொரு நாளும் காலையில் அஸ்ஸியை
அவளது பாட்டி பள்ளியில் கொண்டு விட்டாள்.



ஒவ்வொரு மாலையும் அவள் பள்ளியிலிருந்து
வீட்டிற்கு வந்தவுடன், அவளுடைய நண்பர்களுடன்
விளையாடினாள் .



குழந்தைகள் விளையாட்டின் நடுவே சில நேரங்களில் தோட்டத்தின் சுவர் ஏறி பார்க்கும் போது போர் வீரர்கள் நடந்து செல்வதை கண்டு கலக்கம் கொண்டனர்.



சில நேரங்களில் ஹெலிகாப்டர் சத்தம் காதுகளை துளைத்தது.



இந்த களேபரத்தில் கோழிகள் முட்டை இடுவதற்கே பயந்து போனது.



ஒரு நாள் மாலை வீட்டில் கைபேசி ஒலித்தது. அப்பா கவனமாக கேட்டு கொண்டிருந்த போதே அவருடைய முகம் சோர்வடைந்தது. அவர் தம் குடும்பத்தை நோக்கி எல்லோரும் இப்பொழுதே கிளம்புங்கள். சீக்கிரம் ! எதையும் எடுப்பதற்கு நமக்கு நேரமில்லை. எல்லோரும் காரில் ஏறுங்கள் என்று பதட்டத்துடன் கூறினார். பயங்கரமான ஆபத்தில் நாம் இருக்கிறோம். உடனிடியாக நம் நாட்டை விட்டு வெளியேற வேண்டும். அஸ்ஸீயின் வாழ்க்கை அந்த தருணமே தலை கீழாக மாறியது.



அப்பா அம்மா அஸ்ஸீ, பாட்டி என அனைவரும் பம்பரமாக சுழன்றனர். அப்பா ஒரு பையிலிருந்த பீன்ஸ் களை எடுத்து கொண்டார். அம்மா பாட்டி நெய்த கம்பிளியை எடுத்து கொண்டாள். அஸ்ஸீ தனக்கு பிரியமான கரடி பொம்மையை எடுத்து கொண்டாள். பாட்டி அஸ்ஸீக்கு கோர்ட்டை அணிவித்தாள்.



நான் வீட்டை பார்த்து கொள்கிறேன் என்றாள் அஸ்ஸீயின் பாட்டி எனக்கு எந்த ஆபத்தும் இல்லை. உங்களை பின்தொடர்ந்து நானும் வந்து விடுவேன் என்றாள். ஆனால் அஸ்ஸீக்கோ தனியே பாட்டியை அங்கு விட்டு வருவதை விட கொடுமையான செயல் வேறெதுவும் இல்லை என்று வருந்தினாள்.





காரில் அம்மா அஸ்ஸீயை
பாட்டி கொடுத்த கம்பிளியால்
மறைத்து வைத்தாள்.



மலைகளை
நோக்கி அப்பா காரை
விரைந்து ஓட்டினார்.



சோர்வடையாமல்
இருப்பதற்கு அம்மா பாட்டு
பாடி கொண்டே வந்தாள்.



ஒரு இடத்தில் போர் வீரர்கள் காரை நிறுத்தி ஒளி மிகுந்த டார்ச்சை
வண்டியின் உள்ளே அடித்தனர். அடையாள அட்டையை காண்பிக்க
கூறினர். சத்தம் இல்லாமல் பதுங்கி இருந்தால் அஸ்ஸீ ஏனென்றால்
அவளுக்கென எந்த அடையாள அட்டையும் இல்லை.பயத்தோடு
இருந்தாள். ஆனால் அங்கிருந்த வீரர்கள் அவளை பார்க்கவே இல்லை.



அப்பா முன்னைவிட
காரை மிக வேகமாக
ஓட்டினார்.




பசியோடும்
தாகத்தோடும்
இருந்தாள் அஸ்ஸீ.



அவளுடைய பிரியமான கரடி
பொம்மை பாபாவை கட்டி
அணைத்து கொண்டாள். அப்படியே
மெதுவாக உறங்கி போனாள்.



அவள் கண் முழித்த போது, கார் நின்று இருந்தது.
அம்மா கதவை திறந்து அஸ்ஸீயை வெளியே தூக்கினாள். சில்லென்ற காத்து !



அஸ்ஸீயின் முன்னே பறந்து விரிந்த அமைதியான கடல் இருந்தது. மக்கள் எல்லோரும் அதை நோக்கி ஓடி கொண்டிருந்தனர். அப்பா, அம்மா, அஸ்ஸீ காரை அப்படியே விட்டு விட்டு அந்த படகை நோக்கி ஓடினர்.



படகு துறையில் படகில் ஏறுவதற்கு தள்ளு முள்ளுமாக இருந்தது.
எப்படியாவது இந்த கொடும்போரிலிருந்து தப்பிக்க வேண்டும் என்ற எண்ணம் மக்களை பையித்தியமாக்கி விட்டது.அப்பாவும் அம்மாவும் சேர்ந்து தள்ளினர் வேறு வழி இல்லாமல்.



ஒரு ஏணி படியின் வழியே ஒருவழியாக கீழே இறங்கி படகில் குதித்தனர். அவ்வளவு தான் இதற்கு மேல் இடமில்லை! என்று கத்தி கொண்டே கயிற்றை தூக்கி எறிந்தான் படகோட்டி. என்ஜின் ஓட ஆரம்பித்தது. படகு திரும்பியது. பரந்த வெளி கடலில் அஸ்ஸீயின் பயணம் தொடங்கியது.



அலைகளின் மேலும் கீழும் படகு இரவு பகல் என பயணித்தது.




அஸ்ஸீ தன் காய்ந்த உதடுகளை நாக்கினால் தடவிய போது உப்பு கரிப்பதை உணர்ந்தாள். அப்பாவை கட்டி கொண்ட போது, அவருடைய கோர்ட்டில் உப்பு படிந்து இருந்தது. அவள் உறங்கும் போது போர்த்திக்கொள்ளும் பாட்டியின் கம்பளி நனைந்து ஈரம் கொண்டிருந்தது.



ஒரு புதிய நாள் விடிந்து கொண்டிருந்தது. ஒரே ஒரு நட்சத்திரம் தென்பட்டது. தூரத்தில் தென்பட்ட நிலம் சாம்பல், இளஞ்சிவப்பு நிறம் கொண்டதாக இருந்தது. அஸ்ஸீ முதன் முதலாக ஒரு புதிய நாட்டின் நிலப்பரப்பை கண்டாள்.




அஸ்ஸிக்கு எல்லாமே வித்தியாசமாக இருந்தது அந்த புதிய நாட்டில் மக்கள் வித்தியாசமாக இருந்தனர்
அஸ்ஸிக்கு தரப்பட்ட உணவும் வித்தியாசமாக இருந்தது



உங்களுடைய அடையாள அட்டையை காண்பிக்க முடியுமா?
அங்கிருந்தவர்கள் அப்பாவிடம் வேற்று மொழியில் பேசினார்கள் .



எங்கள் மொழியில் தெரிந்தவர் அப்பாவிடம் பேச வந்தார். அப்பா அவரிடம் நீண்ட நேரம் பேசி கொண்டிருந்தார்.



கடைசியாக ஒரு பேருந்து அவர்களை ஏற்றி கொண்டு புது வீட்டிற்கு அழைத்து சென்றது.



இந்த வீடு அஸ்ஸியின் வீடு போல் இல்லை. இதில் ஒரு அரை மட்டுமே இருந்தது ஒரு கழிப்பறையும் இருந்தது. "அஸ்ஸி இங்கே பாரு " நல்ல மனிதர்கள் நமக்கு சமைக்கிற பாத்திரங்களையும், அன்றாட தேவைக்கான சாமான்களையும் கொடுத்து உதவியுள்ளனர் .

"எனக்கும் சீக்கிரமே ஒரு வேலையும் கிடைத்து விடும். பிறகு நமக்கென ஒரு நல்ல வீடும் வாங்கி மகிழ்ச்சியாக இருக்கலாம். "பாட்டி இல்லாத வீடு எப்படி மகிழ்சியாக இருக்க முடியும்?" என்று நினைத்து கொண்டாள் அஸ்ஸி.



அம்மாவும் அஸ்ஸியும் அந்த பெரிய நகரத்தின் வீதிகளில் நிறைய நாட்கள் நடந்து திரிந்து வந்தனர். ஒரு நாள் அங்குள்ள பள்ளி ஒன்றில் அஸ்ஸியை சேர்த்து கொள்வதாக தெரிய வந்தது.



அஸ்ஸி அவளுடைய புதிய ஆசிரியரை சந்தித்தாள். “ஹலோ அஸ்ஸி என் பெயர் மிஸ்டர் மில்லர் என அறிமுகபடுத்தி கொண்டார். திங்கள் கிழமையிலுருந்து பள்ளியில் உன்னை பார்க்க நாங்கள் ஆவலாய் இருக்கிறோம் என்றார்” திங்கள் என்பதை அம்மா புரிந்து கொண்டாள். சரி என்றவாறே மகிழ்ச்சியுற்று புன்னகைத்தாள்.



ஞாற்றுக்கிழமை இரவு அஸ்ஸியை அம்மா சோபாவில் படுக்க வைத்தாள்.
அஸ்ஸியோ பாட்டியின் நினைவாகவே இருந்தாள்.




அவளுடைய புதிய பள்ளி எப்படி இருக்கோமோ என்றே நினைத்து கொண்டிருந்தாள். மொழி தெரியாமல் எப்படி நட்பு கிடைக்கும் என்று எண்ணினாள். புதிய ஆசிரியர் கூறும் பாடங்களை எப்படி புரிந்து கொள்வேன் என்று வருந்தினாள்.



பள்ளிக்கூடம் குழந்தைகிளின் கூச்சலும் விளையாட்டுமாக இருந்தது.
அவர்களுடைய ஆடைகள் வித்தியாசமாக இருந்தது. மொழியும் வித்தியாசமாக இருந்தது.
அஸ்ஸியிடம் யாரும் ஹலோ கூட கூறவில்லை.



மணி அடித்தவுடன் குழந்தைகள் மிஸ்டர் மில்லரின் வகுப்பறையை நோக்கி சென்றனர். அஸ்ஸிக்கு அழுகையாக வந்தது. நான் அழப்போவதில்லை என்று தனக்கு தானே கூறிக்கொண்டாள்.



மிஸ்டர் மில்லர் கைதட்டி அனைவறையும் அமைaதியாக இருக்குமாறு கூறினார் .
இன்றிலிருந்து அஸ்ஸி நம்மோடு சேர போகிறாள்.
அவளுக்கு நல்ல வரவேற்பு தாருங்கள் என்று கூறி கை தட்டினார். அவர் என்ன பேசினாரென்று அஸ்ஸிக்கு புரியவில்லை.,



கடைசியாக தன்னுடைய மொழியில்
ஒரு குரல் வருவதை கேட்டாள்.



அந்த குரல் மெலிதாக
வந்தது.



அந்த பெண் கருணை உடையவராக இருந்தார்.
ஹலோ அஸ்ஸி என் பெயர் சபீன் என்றார். உனக்கு
உதவுவதர்க்கு தான் நாம் இங்கு வந்து இருக்கிறேன்
என்றார்.



மிஸ்டர் மில்லர் என்ன பாடங்களை எடுக்கிறாரோ அதை அவள் மொழியில் புரிய வைத்தாள்
சபீன். அஸ்ஸிக்கு புதிய வார்த்தைகளை சொல்லி கொடுத்தாள். விரைவிலேயே அஸ்ஸி
“ஹலோ” “குட்பை” “என் பெயர் அஸ்ஸி” போன்ற வார்த்தைகளை பேச கற்று கொண்டாள்.



மதிய நேரத்தில் உணவு உண்ணும் பொது
அஸ்ஸி தனிமையாக உணர்ந்தாள்.
அவள் அம்மா செய்து அனுப்பிய உணவையே
உண்டாள். ஆனால் மற்ற குழந்தைகள் எடுத்து
வந்த உணவோ வித்தியாசமாக இருந்தது.



உணவு உண்டபின் அவள் தன்னுடைய
கோர்ட்டை அணிந்து கொண்டு பள்ளி
மைதானத்திற்கு சென்றாள்.



யாரோ தன்னை நோக்கி ஓடி வருவதை
உணர்ந்தாள். ஹலோ என்றால் அந்த சிறுமி.
என் பெயர் லூசி என்றாள். சபீன் சொல்லி
கொடுத்ததை நினைவு கூர்ந்தாள். குட்பை என்
பெயர் அஸ்ஸி எனறாள்.



“ஹலோ என்கிறாயா” என்றால் லூசி சிரித்து
கொண்டே “ஹலோ என் பெயர் அஸ்ஸி”
“குட்பை” என்றாள் அஸ்ஸி.
லூசி இன்னும் சிரித்தாள். அஸ்ஸியும் அவளோடு
சேர்ந்து சிரித்தாள். சரி அதை விடு என்றாள் லூசி.



லூசி ஸ்கிப்பிங் விளையாடுவதை பார்த்து கொண்டிருந்தாள் அஸ்ஸி .
லூசி 5 என்னும் வரை விளையாடி கயிறில் தடுக்கி நின்றாள். இப்பொது அஸ்ஸியின் முறை.



அஸ்ஸி 20 என்னும் வரை தடுமாறவே இல்லை. அன்றைக்கு ஸ்கிப் என்ற புதிய வார்த்தையை கற்று கொண்டாள்.



இப்படியே சில நாட்கள் கழிகிறது. சபீன் பள்ளி படங்களை கற்பதற்கு அஸ்ஸிக்கு மிகவும் உதவியாக இருக்கிறாள். ஒரு நாள் அஸ்ஸி துப்பாக்கி ஏந்திய ஹெலிகாப்டரை வரைந்திருந்தாள்.



அஸ்ஸி சபீனுக்கு அவர்கள் இந்நாட்டிற்கு வந்த கதையை கூறினாள். போரை பற்றியும் அவர்கள் குடும்பம் எப்படி தப்பித்து வந்தது என்றும் கூறினாள். பாட்டியை அங்கேயே விட்டு வந்ததை கூறி மிகவும் வறுத்த பட்டாள் . எனக்கு உன் நிலைமை நன்கு புரியும் ஏனென்றால் எனக்கு ஆறே வயது இருக்கும் போது தான் என் நாட்டை விட்டு வந்தோம் என்றாள் .


சபீன் அவளது கதையை
அஸ்ஸியிடம் கூறினாள்.
நான் எனது
குடும்பத்துடன்
காட்டின் வழியே
நடந்து வந்தேன்.
ஆற்றை கடந்து
வந்தேன் .
மலைகளின் மேல் ஏறி
வந்தேன் .
கடைசியாக ஒரு
கேம்பிறகு வந்து
சேர்ந்தோம்.
அந்த கேம்பில் பல
ஆண்டுகள்
தங்கியிருந்தோம்.
ஒரு நாள் என்னை
விடுவித்தார்கள்.
ஆனால் என் குடும்பம்
அங்கே தங்க
வேண்டியதாயிற்று. அதுவே
மிகவும் வேதனைக்குரியது.
ஒரு நாள்அவர்கள்
என்னோடு இணைவார்கள்.
அதே போல் உன்
பாட்டியும் உன்னோடு
வந்து சேர்ந்து விடுவார்.



இதற்கு பிறகு சபீன் அம்மாவை அடிக்கடி சந்தித்து உரையாடினாள். ஒரு நாள் அஸ்ஸி நன்றாக படிக்கிறாள். அவள் ஆங்கிலம் நன்கு கற்று வருகிறாள். எங்களுடைய மொழியை மறந்து விட மாட்டாளே?” என்றாள் அம்மா.
“இல்லை இல்லை! என்னை போலவே அவள் இரண்டு மொழியிலும் பேசுவாள் என்று கூறி சிரித்தாள்” சபீன்.



அன்றைக்கு வீட்டிற்கு செல்லும் போது அஸ்ஸி அவள் அன்று கற்று கொண்ட வாக்கியங்களை அவள் அம்மாவிடம் சொல்லி கொண்டே வந்தாள்.
“எனக்கு இந்த பொருள் வேண்டும்” “இந்த பொருளின் விலை என்ன?” “வாழைப்பழம்”…



“இந்த பொருளை நான் எடுத்து கொள்ளலாமா” “இது என்ன” “பாட்டி”…



அன்றிரவு அப்பா வந்தபோது மிகவும் சோர்வாக இருந்தார். அஸ்ஸியிடம் அன்று அவர் கற்று கொண்ட வார்த்தைகளை கூறவே இல்லை. அப்பா களைப்பில் படுத்து கொண்டார். அம்மா இரவு உணவு சமைத்து கொண்டிருந்தாள்.

“ஏதாவது வேலை கிடைத்ததா அப்பா என்று கேட்டாள்” அஸ்ஸி.

“இல்லை அஸ்ஸி இன்னும் நான் இந்த நாட்டில் வேலை செய்வதற்கு அனுமதி இல்லை. நமக்கென்று ஒரு தோட்டம் இருந்தால் கூட நாம் கொண்டு வந்த பீன்ஸை பயிரிட்டு நமது உணவை விளைவித்து கொள்ளலாம். ஆனால் அது முடியாது. நான் கொண்டு வந்த பீன்ஸ் கூட இப்போது வீணே” என்று கூறி கண்களை மூடி கொண்டார்.




பள்ளியில் அஸ்ஸி பத்து வரை எண்ண கற்று கொண்டாள். “சீக்கிரமே உன் கால் விரல்களை நீயே எண்ணி விடுவாய்” என்றாள் சபீன்



மதிய உணவின் போது லூசியும் அஸ்ஸியும் உணவை பகிர்ந்து கொண்டனர்.
லூசிக்கு அஸ்ஸி கொண்டு வந்த கொண்டைக்கடலை மிகவும் பிடித்துபோனது.



வசந்த காலமும் வந்தது. ஒரு நாள் மிஸ்டர் மில்லர் மாணவர்களிடம் பேசினார். “நாளை முதல் தோட்ட கலை வகுப்புகள் தொடங்குகிறது. விதைகளை நாளை பள்ளி தோட்டத்தில் விதைக்கலாம். என்ன செடிகள் விதைக்கப்போகிறோமோ அதை படமாக யார் வரைய போகிறார்கள்.” நான்! என்று அனைவரும் சத்தமாக கத்தினர்.



குழ்நதைகள் படங்கள் வரைந்தனர்...
தக்காளி
கீரை
பூசணிக்காய்
சூரியகாந்தி பூ
அஸ்ஸி கனவில் ஆழ்ந்திருந்தாள். அக்கனவில் அவள் வீட்டு தோட்டத்தில் தக்காளி பச்சையிலிருந்து சிகப்பு வண்ணத்திற்கு மாறி கொண்டிருந்தது . பெரிய இலைகள் கொண்ட கீரைகள் வளர்ந்திருந்தது. சூரிய-காந்தி பூக்கள் அவளுடைய வீட்டின் சமையலறையை நோக்கி மாளர்ந்திருந்தன. அஸ்ஸிக்கு மிகவும் பிடித்த இடமும் அது தான். அவளுக்கு மிகவும் பிடித்த மசாலா பீன்ஸை அங்கு உட்கார்ந்து தான் தின்பாள்.
அஸ்ஸி நடந்து பலகையின் அருகில் சென்றாள். ஒரு பேனாவை எடுத்து பீன்ஸை விரைந்தாள். “சமத்துப் பெண்” அஸ்ஸி என்றார் மிஸ்டர் மில்லர். இந்த பீன்ஸை நமது பள்ளி தோட்டத்தில் நடலாம். அது வளர்ந்து நன்கு காய்க்கும் போது அதை உண்ணலாம். அதை கேட்டவுடன் அஸ்ஸிக்கு ஒரு யோசனை வந்தது.



ஆமாம் அப்பாவின் பையில் உள்ள
தன் தோட்டத்து பீன்ஸை
கொண்டு வர வேண்டும்.
அதை தன் பள்ளியில்
உள்ள தோட்டத்தில்
நட வேண்டும்.
அவள் அப்பாவிற்கு ஒரு
ஆச்சரியம் கொடுக்க வேண்டும்!
வீட்டிற்கு வந்தவுடன்
அப்பாவின் பையை நோக்கி
ஓடினாள்.
கையை விட்டு பார்த்தாள். பை
காலியாக இருந்தது.
ஆனால் பையினுள் நல்ல
மனம் இருந்தது!
“அஸ்ஸி இங்க
பாரு” உனக்கு பிடித்த
மசாலா பீன்ஸ் என்றாள்.
அஸ்ஸியின் கண்களில் கண்
ணீர் நிறைந்திருந்தது. அஸ்ஸி
ஏன் அழுகிறாள்?
“அஸ்ஸி நீ களைத்து
போயிருக்காய் கண்ணே”
என்றாள் அம்மா
அம்மாவிற்கு அஸ்ஸியின்
கவலை புரியவில்லை.



அஸ்ஸிக்கு அன்று அந்த சுவையான பீன்ஸை உண்பதிற்கு மனமே இல்லை. இவை எல்லாம் தன் பள்ளி தோட்டத்தில் உயர்ந்த கொடிகளாக வளர்ந்திருக்க கூடுமே என்றே யோசித்து கொண்டிருந்தாள். அவ்விதைகளை கொண்டு தனது அம்மாவிற்கும் அப்பாவிற்கும் ஏன் முழு பள்ளிக்குமே சுவையான பீன்ஸை கொடுத்திருக்கலாம் என்று எண்ணினாள். அப்பாவையும் மகிழ்ச்சியாக்கியிருக்கலாம் பழைய நாட்களை போல.



அஸ்ஸியால் அன்று இரவு தூங்கவே முடியவில்லை. அம்மா தனக்காக புதிய ஆடையை தைத்து கொண்டிருப்பதை நினைத்தாள். பாட்டியோடு கம்பளிக்காக நூல் சுற்றி கொடுப்பதை நினைத்தாள் அதோடு சேர்ந்து பாட்டியை நினைத்து பயமும் வந்தது. அதன் பிறகு தன்னையும் குடும்பத்தையும் இந்த புதிய நாடு ஏற்று கொள்ளுமா என்ற கவலையாகினாள்.


திடிரென்று அஸ்ஸி உறக்கத்திலிருந்து எழுந்தாள். படுக்கையின் அடியில் ஏதோ இருப்பதாக உணர்ந்தாள்.
பீன்ஸ் விதைகள் தான் !! அப்பாவின் பையிலிருந்து விழுந்திருந்தது.
யாரும் சமைக்காத பீன்ஸ் தான் அது.
எட்டு பீன்ஸ் விதைகள் இருந்தது. அவள் பள்ளி தோட்டத்தில் நடுவதற்கு அது போதும்.
அஸ்ஸி சோபாவின் மேல் ஏறி விதைகளை தன் கோட் பாக்கெட்டில் பத்திரமாக வைத்தாள்.
தன் பாட்டியின் போர்வையில் தன்னை சுருக்கி கொண்டு நிம்மதியாக உறங்கினாள்.




எட்டு விதைகள்! இன்று அதை விதைத்து விட வேண்டும்
எட்டு குச்சிகளை நிலத்தில் ஊன்றினாள் அஸ்ஸி
அதன் அருகே ஒரு சிறிய பள்ளம் தோண்டி பீன்ஸையும் விதைத்தாள்.



“யார் உனக்கு பீன்ஸ் இப்படி நடுவதற்கு சொல்லி கொடுத்தார்கள் அஸ்ஸி” என்றார் மிஸ்டர் மில்லர்
“என் பாட்டி” என்றாள் அஸ்ஸி “அருமை! நீ இப்போது எங்களுக்கு கற்று தருகிறாய்” என்றார் அவளது ஆசிரியை சபீன்.


அம்மாவுடன் வீடு திரும்பும் போது அஸ்ஸியின்
எண்ணமெல்லாம் பள்ளி தோட்டத்தில்
விதைத்த பீன்சின் மீதே இருந்தது.
அம்மாவும் எதெயோ நினைத்து சிரித்தாள்
அஸ்ஸியை நோக்கி.
அடேடேய் !
என்றாள் சாலையை கடக்கும் போது.
நீ தயாரா!
அஸ்ஸியை வீட்டின் கதவிற்கு முன் நிக்க வைத்து.


"கண்ணை மூடி கொள்" என்றாள் அம்மா.
"இப்போது கண்ணை திற" என்றாள் .
பாட்டி ! என்று கத்தினாள் அஸ்ஸி.
பாட்டியின் மடியில் ஓடி மழிழ்ச்சியில் அழ தொடங்கினாள் அஸ்ஸி. பாட்டியும் அழுதாள். அவர்களோடு சேர்ந்து அம்மாவும் அப்பாவும் கூட.


பாட்டி மிகவும் சோர்வாக இருந்தாள். இரவு உணவுக்கு பின் அவளுக்கு என்ன நேர்ந்தது என்று கூறினாள்.
கொடியவர்கள் துப்பாக்கியோடு வீட்டிற்கு வந்தனர். நான் மிகவும் பயந்து விட்டேன்.
நம் தோட்டம், கோழிகள் என்று வீட்டில் உள்ள அனைத்தையும் விட்டு வரவேண்டியதாயிற்று.
என்னுடைய தங்க வளையல்களை விற்றே இந்த பயணத்திற்கு செலவு செய்ய முடிந்தது என்றாள்.
ஒரு பெரிய லாரியில் இரவு முழுவதும் கரடு முரடான பாதையில் பயணித்தேன். மிகவும் ஆபத்தான பயணம் அது.
பகல் நேரங்களில் வண்டியை நிறுத்தி எங்காவது மறைந்து கொள்ள வேண்டும்.
இங்கு வந்த போது எங்கே என்னை துரத்தி விடுவார்களோ என்று பயந்து கொண்டே இருந்தேன்.
நான் இங்கு தங்கி கொள்ளலாம் என்றவுடன் என் மகிழிச்சிக்கு அளவே இல்லை.
“இப்போது நாம் பாதுகாப்பாக இருக்கிறோம், அதுவே மிக முக்கியம்” என்றாள் பாட்டி



அந்த சிறிய அறையினிலே வாரங்கள் கழிந்தன. அப்பா வேலை செய்வதற்கான அனுமதியும் கிடைத்தது. நாம் இங்கேயே இருக்க முடியும் என்று சந்தோஷத்தில் கத்தி கொண்டே வந்தார். நான் இனி இந்நாட்டில் வேலை செய்ய முடியும். என்னை பின் தொடர்ந்து வாருங்கள்!



அவர்கள் கீழே இறங்கி வெளியில் வந்தார்கள் அதே சாலையின் முக்கில் ஒரு சிறிய வீடு ஒரு முற்றதோடு இருந்தது அனைவரும் அங்கு வந்து சேர்ந்தனர்.



“இனி நாம் இந்த வீட்டில் குடி பெயர்ந்து கொள்ளலாம். இதில் இரண்டு அறையும் ஒரு குளியலறையும் இந்த முற்றமும் உள்ளது” என்கிறார் அப்பா. “தையல் மெஷின் வைப்பதற்கு இடம் வேண்டும் என்றாள் அம்மா நான் உட்கார்ந்து தைப்பதற்கு ஒருவேண்டும்” என்றாள் பாட்டி லூசியுடன் விளையாடுவதற்கு ஒரு இடம் வேண்டும்” என்றாள் அஸ்ஸி. “என்னுடைய புது வீடு பழைய வீடு போல் ஒரு போதும் இருக்காது. ஆனால் அது ஒவ்வொரு நாளும் மேன்மை அடைந்து கொண்டு தான் இருக்கிறது” என்று நினைத்தாள் அஸ்ஸி.



கோடை காலமும் வந்தது அஸ்ஸி நிறைய
புது விசயங்களை கற்று கொண்டாள்.



வீட்டில் பாட்டி அவளுடைய சிறுவயது
கதைகள் நிறையவே கூறினாள்.



ஜமால் என்ற பயன் அவர்கள் பள்ளியில் புதிதாக சேர்ந்தான்.
அவன்வேறொரு நாட்டிலிருந்து குடிபெயர்ந்தவன். அஸ்ஸியும்,
லூசியும் அவனுக்கு ஆங்கிலம் கற்று தந்தனர். அவன் ஸ்கிப்பிங்
விளையாடுவதில் கில்லாடியாக இருந்தான்.



அவள் நட்ட பீன்ஸ் செடி
குச்சியில் உயர உயர் வளர்ந்து
கொண்டே வந்தது.
தேனீக்களும் பூக்களை
மொய்க்க தொடங்கின. பீன்ஸ்
காய் வைக்க தொடங்கி
விட்டது. ஒவ்வொரு நாளும்
அது பெரிதாகி கொண்டே
இருந்தன.



கோடை காலமும் முடிவுக்கு வந்தது. அஸ்ஸியுடைய பீன்ஸ் செடியும் மஞ்சள் நிறமாக மாற தொடங்கின. பீன்ஸ் கொலை கொலையாக தொங்கி கொண்டிருந்தது.
“என்னுடைய நாட்டில் இது விளைச்சல் காலம் என்றாள்” அஸ்ஸி. எல்லா குழந்தைகளும் மிஸ்டர் மில்லரும், அவளது ஆசிரியை சபீனும் சேர்ந்து பீன்ஸை பறிக்க தொடங்கினர். அதை இரண்டாக பிளந்து சிவப்பு நிற பீன்ஸை பையில் கொட்டினர். பையும் முழுமையாக நிறைந்தது. அஸ்ஸி கொஞ்சம் பீன்ஸை அடுத்த ஆண்டு விதைப்பதற்கு வைத்து கொள்ளேன்” என்றார் மிஸ்டர் மில்லர்
“அது நல்ல யோசனை” என்றாள் அஸ்ஸி மகிழ்சியுடன் அவளுடைய புதிய மொழியில்.



பீன்ஸை எடுத்து கொண்டு வீட்டிற்கு சென்றாள் அஸ்ஸி. அப்பாவும் பார்த்தார், அவரால் நம்பவே முடியவில்லை. இது நம் நாட்டில் இருந்து நான் கொண்டு வந்த பீன்ஸ் போல இருக்கிறதே என்றார்.

“ஆம் அதே தான் அப்பா” என்றாள் அஸ்ஸி. "மிச்சம் எட்டு விதைகள் கீழ் இருந்ததையும் அதை அவள் பள்ளி தோட்டத்தில் விதைத்ததையும் கூறினாள். அதுவே வளர்ந்து இப்போது ஒரு பை நிரைய பீன்ஸாக கிடைத்தது” என்றாள். அப்பா அவளை கட்டி அணைத்து முத்தம் கொடுத்தார்.



அவர் சிறிது எடுத்து கொண்டு அவருடைய தோட்டத்தில் நடுவதற்கு சென்றார்.



பாட்டி சிறிது எடுத்து சமைப்பதற்கு சென்றாள்



அம்மா மீதியை எடுத்து பனி காலத்திற்கு சாப்பிடுவதற்கு சேமித்து வைத்தாள்.



அப்பா நீங்கள் மகிழ்ச்சியா ! என்று கேட்டாள் அஸ்ஸி.
அஸ்ஸி நீ என்னை மகிழ்ச்சியடைய வைத்து விட்டாய் என்றார் அப்பா அஸ்ஸியின் பீன்ஸை கொண்டு ஒரு சிறப்பு உணவு ஒன்று செய்ய போகிறேன் என்றாள் அம்மா.
புதிய பீன்ஸ்! புதிய வாழ்வு என்றாள் பாட்டி
போபோவும் சிரித்தது! எப்போதும் போல





அஸ்ஸியும், பெற்றோரும் அபாயத்தில்...

அவர்களுடைய வீட்டையும்,
நாட்டையும் விட்டு வேறொரு நாட்டிற்கு
தப்பித்து சென்று அகதியாக வாழவும்
புதிய மொழியை கற்று கொள்ளவும்
வேண்டியதாயிற்று. நெருக்கடியில்
பாட்டியை விட்டு வர
வேண்டியதாயிற்று. பாட்டியை அஸ்ஸி
மீண்டும் சந்திப்பாளா. எப்படி இந்த
புதிய நாட்டில் அஸ்ஸி மாற்றங்களை
சாதுரியமாகவும், தைரியமாகவும்
எதிர்கொள்கிறாள் என்பதே இக்கதை.

இக்கதை அழகாகவும், நகைச்சுவை
கலந்தும் எழுதி இருக்கிறார் ஆசிரியர்.
எல்லா வயதினரும் படித்து
மகிழ்ச்சியடையலாம்.





ISBN 978-1-84780-261-3

51799

9 781847 802613

UK£12.99 US$17.99

FRANCES LINCOLN CHILDREN'S BOOKS

www.franceslincoln.com